**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.406/2014** பி.வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | குமாரி | **வயது** | : | 60 |
| **த.பெ** | : | காளியப்பன் | **தாலுக்கா** | : | சேத்பட் |
| **கிராமம்** | : | ஆத்துரை | **தொழில்** | : | விவசாயம் |

**07.10.2025 – பி.வா.சா.1 குறுக்கு விசாரணை**

1) வழக்கு சொத்தின் சர்வே நெம்பர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள **பி.சா.ஆ-1** ஆவணம் யாரிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணம் என்றால் முனுசாமி என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணம் ஆகும். **பி.சா.ஆ-1** ஆவண சொத்துக்களை நான் அதன் மூலபத்திரங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்களை மற்றும் வில்லங்கம் ஆகியவை பரிசீலனை செய்துதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். முனுசாமி அவர்கள் அவருக்கு பாகம் மூலம் கிடைத்த சொத்து என்று எனக்கு **பி.சா.ஆ-1** ஆவணம் மூலம் கிரையம் கொடுத்தார். நான் மேற்படி கிரையம்பெற்ற சொத்து முனுசாமி அவர்களுக்கு முன்னர் ஆதியில் எனக்கு யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2) வழக்கு சொத்து 1 வது அயிட்ட சர்வே நெம்பர் 290/3 டி ல் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. முனுசாமி அவர்களுக்கு மேற்படி சொத்து எப்படி பாகம் கிடைக்கபெற்றது என்றால் எனக்கு தெரியாது. நான் வாங்குவதற்கு முன்பும், பின்பும் எத்தனை உட்பிரிவுகள் ஆகியுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முனுசாமி அவர்களின் தந்தைபெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகளுக்கும், முனுசாமிக்கும் இடையே என்ன உறவுமுறை என்றால் முனுசாமி வீட்டில் பிறந்த பெண்கள் தான் வாதிகள். நான் கிரையம்பெற்ற சொத்துக்கள் முனுசாமிக்கு பாகம் வந்த சொத்து தான். எத்தனை விஸ்தீரணம் அவருக்கு பாகம் வந்தது என்றால் 12 செண்ட் கிடைக்கபெற்றது. அவருக்கு கிடைத்த 12 செண்டையும் எங்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார்.

3) நான் கூறுவது தவறு முனுசாமியின் தந்தைக்கு வழக்கு 1 வது அயிட்ட சொத்தில் 36 செண்ட் பாகம் கிடைத்தது, முனுசாமிக்கு பாகம் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. முனுசாமி அவர்களின் தந்தை முத்து அவர்களின் வாரிசுதாரர்களுக்கு முத்து அவர்கள் கிரையமாக வழக்கு 1 வது அயிட்ட சர்வே நெம்பரில் 97 ½ செண்டை கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. உரிமை இல்லாத சொத்தை கிரையம் கொடுத்துவிட்டார்கள், மேலும் உரிமை இல்லாத சொத்தை முனுசாமி **பி.சா.ஆ-1** மூலம் கிரையம் கொடுத்தது தவறு என்றால் சரியல்ல. முனுசாமி அவர்களின் தாத்தா பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முனுசாமியின் தாத்தா பெயர் அருளப்பன்

அவர்களுக்கு 2 மகன்கள் சுப்புராயன் மற்றும் கரியன் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4) நான் கிரையம்பெற்ற சொத்தானது சுப்பராயன் மற்றும் கரரியன் அவர்களுக்கு ஆதியில் பாதியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. முனுசாமி அவர்களின் உடன்பிறந்தவர்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முனுசாமியுடன் பிறந்தவர்கள் முனியம்மாள், அஞ்சலி, விஜயா, ஆறுமுகம், கிருஷ்ணமூர்த்தி, ராமமூர்த்தி என்றும், முனுசாமி கடைசியாக பிறந்தவர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. முனுசாமியின் தந்தையின் உடன்பிறந்தவர்களை எனக்கு தெரியாது. முத்து உடன்பிறந்தவர்கள் ஜோசப் என்கிற பஞ்சநாதன், ஏகாம்பரம் என்றால் எனக்கு தெரியாது.

5) வாதிகளின் தந்தை தான் மேற்படி ஜோசப் என்கிற பஞ்சநாதன் என்றால் சரிதான். ஜோசப் என்கிற பஞ்சநாதன் என்பவர் அவர் சித்தப்பா அருளப்பன் மகன் கரியன் என்பவரிடமிருந்து தாவா 1வது மற்றும் 2வது அயிட்ட சொத்து சர்வே நெம்பர்களில் மொத்தமாக 1 ஏக்கர் 8 ½ செண்டை **வா.சா.ஆ-2** ஆவணம் மூலம் கிரையம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சுப்பராயன் என்பவருக்கு 3 மகன்கள் முத்து, ஜோசப் என்கிற பஞ்சநாதன், மற்றும் ஏகாம்பரம் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. தாவா அயிட்ட சொத்து சர்வெ நெம்பர்களில் மீதமுள்ள 1 ஏக்கர் 8 ½ செண்ட் சுப்பராயன் வாரிசுகளான ஜோசப் என்கிற பஞ்சநாதன், ஏகாம்பரம், முத்து ஆகியோருக்கு தலா 36 செண்ட் என்று உரிமை உள்ளது என்றால் சரிதான்.

6) ஆகையால் வாதியின் தந்தைக்கு அவர் சித்தப்பா மூலம் 1 ஏக்கர் 8 ½ செண்ட் கிரையத்தின் மூலமும், தந்தை மூலம் அவருக்கு 36 செண்டும் சேர்த்து 1 ஏக்கர் 44 ½ செண்ட் தாவா அயிட்ட சொத்து சர்வே நெம்பர்களின் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வாதிகள் அவர்களின் தந்தைக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 44 ½ செண்டில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் அவர்களுக்கு பாகம் கிடைப்பதற்கு எனக்கு எந்த ஆட்பணையும் இல்லை என்று சொன்னால் ஆட்சேபணை இல்லை. நான் **பி.சா.ஆ-1** ஆவணம் மூலம் கிரையம்பெற்ற எந்தவொரு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முனுசாமியிடமிருந்து கிரையம் பெறும்போது வாரிசு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் ஆகியவற்றை பரிசீலனை செய்து கிரையம் பெற்றேனா என்றால் பெறவில்லை. வாதிகள் பெங்களூரில் வசித்துவருகிறார்கள் என்றால் சரிதான்.

7) நான் கிரையம் வாங்கிய சொத்தில் முனுசாமியின் வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது என்றால் இல்லை அவருக்கு தான் உரிமை உள்ளது. முனுசாமியின் பூர்வீக சொத்தில் அவரின் உடன்பிறந்தவர்கள் அவரின் வாரிசுகளுக்கு தான் உரிமை உள்ளது அதை அறியாமல் நான் **பி.சா.ஆ-1** ஆவணம் சொத்தை நான் கிரையம் பெற்றது தவறு என்றால் சரியல்ல. முனுசாமி அவர்கள் எனக்கு கிரையம் கொடுத்தது செல்லாது, நான் தவறாக கிரையம் பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்து பற்றி நேரடியாக வேறெதுவும் தெரியாது என்றால் தெரியாது. வாதிகள் கேட்டுக்கொண்டபடி தாவா சொத்துக்களில் 7 ல் 3 பாகம் ஒதுக்க எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் தெரியாது. தாவா சொத்து பாகம்பிரிக்கபடாத கூட்டுகுடும்ப சொத்து என்றால் சரிதான். 2014 ல் தான் தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்பட்டுள்ளது என்ற விவரம் வாதிகளுக்கு தெரிந்த பிறகு தகராறு ஏற்பட்டு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால்

சரிதான். நான் பதிலுரையில் கூறியுள்ள சங்கதிகள் தவறு மற்றும் வாதிகள் கூறியுள்ளவாறு தாவா சொத்தில் பாகம் கிடைக்க உரிமை உண்டு என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2025.10.08 10:54:52 +0530

District Munsif,
Polur.